


24.07.2024

தலைப்புச் செய்திகள்

1. மாநிலங்களுக்கு எதிராக பாரபட்சம் எதுவும் மத்திய பட்ஜெட்டில் இடம்பெறவில்லை என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

2. எதிர்கட்சிகள் பட்ஜெட் நிதி ஒதுக்கீடு பிரச்சனையில் நாடாளுமன்ற இரு அவைகளிலிருந்தும் இன்று வெளிநடப்பு செய்தன.

3. இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்களையும், அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டுமென்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், வெளியுறவு அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

4. தமிழ்நாட்டில் புதிய குடும்ப அட்டைகள் அடுத்த மாதத்திலிருந்து நுகர்வோருக்கு வழங்கப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

5. நேபாளத்தில் இன்று நேரிட்ட விமான விபத்தில் 18 பேர் உயிரிழந்தனர்.

இனி விரிவான செய்திகள்

□□□□□□□□□

மாநிலங்களவை

மத்திய பட்ஜெட்டில் சில மாநிலங்களுக்கு எதிராக பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாக கூறப்படும் குற்றச்சாட்டை மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராம்ன மறுத்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று கேள்வி நேரத்திற்கு பின்னர் எதிர்கட்சிகளின் குற்றச்சாட்டிற்கு பதிலளித்த அவர், பட்ஜெட்டில் எதிர்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு

நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை என்ற எண்ணத்தை காங்கிரஸ் தலைமையிலான எதிர்கட்சிகள் வேண்டுமென்று விதைப்பதாக குற்றம் சாட்டினார்.

ஒவ்வொரு பட்ஜெட்டிலும், ஒவ்வொரு மாநிலத்தின் பெயரை குறிப்பிட இயலாது என்று தெளிவுபடுத்திய அவர், ஒரு மாநிலத்தின் பெயர் குறிப்பிட படாததால் அம்மாநிலத்தில் மத்திய அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை என்று பொருள் ஆகாது என குறிப்பிட்டார்.

அமைச்சரின் இந்த பதிலில் திருப்தி அடையாத எதிர்கட்சியினர் மாநிலங்களவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

முன்னதாக அவையில் பேசிய எதிர்கட்சித்தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, மத்திய அரசை காப்பாற்றுவதற்கான பொது பட்ஜெட் இது என்று குற்றம் சாட்டினார்.

எதிர்கட்சிகள் இந்நடவடிக்கையை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் என்று கூறியஅவர், நிதிநிலை அறிக்கையில் சமன்பாடு இல்லாவிட்டால் வளர்ச்சி எவ்வாறு ஏற்படும் என்று கேள்வி எழுப்பினார்.

□□□□□□□□

மக்களவை

முன்னதாக இப்பிரச்சனையில் மக்களவையிலும் எதிர்கட்சியினர் வெளிநடப்பில் ஈடுபட்டனர்.

அவை கூடியவுடன் காங்கிரஸ், சமாஜ்வாடி, திமுக, திரிணமுல் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் இப்பிரச்சனையை எழுப்பினர்.

உறுப்பினர்களின் செயல்பாட்டிற்கு கண்டனம் தெரிவித்த அவைத்தலைவர் திரு. ஓம்பிர்லா திட்டமிட்டு வேண்டுமென்றே கேள்வி நேரத்தை நடத்த விடாமல் எதிர்கட்சிகள் செயல்படுவதாக குற்றம் சாட்டினார்.

நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜுஜுவும் எதிர்கட்சிகளின் நடத்தை குறித்து கேள்வி எழுப்பினார்.

□□□□□□□□

அஷ்வினி வைஷ்ணவ்

மத்திய பட்ஜெட்டில் மஹாராஷ்டிர மாநில ரயில்வே துறைக்கு கூடுதல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு, பல்வேறு புதிய ரயில்வே திட்டங்களுக்கு வகை செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு.அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின் போது பேசியஅவர், ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் இரண்டாவது ஆட்சிக் காலத்தில், ரயில்வே மேம்பாட்டிற்கு ஆண்டுக்கு ஆயிரத்து 171 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

□□□□□□□□□

அர்ஜுன்ராம் மெஹ்வால்

மத்திய அரசின் நடப்பு நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களின் நலத்தை உறுதி செய்வதோடு வளர்ந்த இந்தியா பாதையை முன்னெடுத்துச் செல்வதாக மத்திய சட்ட அமைச்சர் திரு.அர்ஜுன்ராம் மெஹ்வால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நீதித்துறை சார்பில் காணொலி கருத்தரங்கில் இன்று உரையாற்றியஅவர், மத்திய அரசின் வளர்ச்சி அடைந்த பாரதம் 2047-ஐ இலக்காக கொண்டிருப்பதாக குறிப்பிட்டார்.

அனைவருக்கும் உரிய நேரத்தில் நீதி கிடைப்பது உறுதி செய்யப்பட்டிருப்பதாக அவர் எடுத்துரைத்தார்.

நீதியியல் துறையை வலுப்படுத்துவதற்கான கட்டமைப்பு நடவடிக்கைகளையும், ஒதுக்கீடுகளையும் சுட்டிக்காட்டிய அமைச்சர், மத்திய பட்ஜெட் உள்ளடக்கிய வளர்ச்சியை முன்னிறுத்துவதாக குறிப்பிட்டார்.

□□□□□□□□□

லோக் அதாலத்

நீதிமன்றங்களில் தேங்கி கிடக்கும் வழக்குகளை விரைந்து சுமூகமாக முடிக்க ஏதுவாக உச்சநீதி மன்றத்தின் சார்பில் சிறப்பு மக்கள் நீதிமன்ற முகாம்கள் வரும் 29-ம் தேதி முதல் அடுத்தமாதம் 3-ம் தேதிவரை நடத்தப்படுகிறது.

நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ள மக்கள், இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள தலைமை நீதிபதி டி.ஒய் சந்திரசூட் கேட்டுக்கொண்டார்.

உச்சநீதிமன்றத்தின் 75-வது ஆண்டு தினத்தை ஒட்டி இந்த சிறப்பு லோக் அதாலத் நடைபெறுகிறது.

□□□□□□□□□

முதலமைச்சர் கடிதம்

இலங்கை கடற்படையால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் 9 தமிழக மீனவர்களை நேற்று கைது செய்ததாக சுட்டிக்காட்டியுள்ளார்

இந்தாண்டு ஜனவரி முதல் ஜூலை 22ஆம் தேதிவரை 250 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக முதலமைச்சர் எடுத்துரைத்தார்.

இம்மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவிக்க தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

□□□□□□□□□

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் இந்துசமய அறநிலையத்துறை சார்பில் 9 திருக்கோவில்களில், 35 அரை கோடி ரூபாய் மதிப்பீட்டில் 14 புதிய திட்டப்பணிகளுக்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி மூலம் இன்று அடிக்கல் நாட்டினார்.

திருச்சி ஸ்ரீரங்கம் அருள்மிகு காட்டழகிய சிங்கர் திருக்கோவிலும் இதில் அடங்கும்.

8 திருக்கோவில்களில், 20 கோடியே 18 லட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்த 12 திட்டப்பணிகளை அவர் தொடங்கி வைத்தார்.

இந்துசமய அறநிலையத் துறையில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 10 பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

முன்னதாக சென்னை பெருநகர காவல்துறையின் பயன்பாட்டிற்காக மேம்படுத்தப்பட்ட 85 இருசக்கர வாகனங்களின் சேவையையும் முதலமைச்சர் துவக்கிவைத்தார்.

941 நாட்டுப்புற கலைஞர்களுக்கு 50 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கும் திட்டமும் தொடங்கிவைக்கப்பட்டது.

□□□□□□□□□

ஸ்மார்ட் அட்டை

தமிழ்நாட்டில் புதிய குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்தவர்களுக்கு ஸ்மார்ட் அட்டைகள் அடுத்தமாதம் முதல் வழங்கப்படும் என மாநில அரசு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற தேர்தல் காரணமாக புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் இதுதொடர்பாக 2 லட்சத்து 80 ஆயிரம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

□□□□□□□□□

உதயநிதி ஸ்டாலின்

தமிழ்நாட்டில் ஆன்லைன் மூலம் கட்டிட அனுமதி நடைமுறைக்கு வந்துள்ளதாக மாநில இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை சோழிங்கநல்லூரில் வருவாய் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் இலவச வீட்டு மனை பட்டாக்களை இன்று வழங்கி பேசினார்

.. வாய்ஸ் ..

□□□□□□□□□

துரைமுருகன்

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் பல்வேறு அரசு நலதிட்டங்களை மாணாக்கர் பயன்படுத்தி கொள்ளுமாறு மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் கேட்டுக்கொண்டார்.

வேலூர் மாவட்டம் வள்ளிமலையில் அரசு கல்லூரியில் புதிய கட்டிடத்தை இன்று திறந்துவைத்து பேசியஅவர், கல்வியை பொது பட்டியலில் இருந்து மாநில பட்டியலுக்கு மாற்ற வேண்டுமென்று கோரினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. க. பொன்முடி புதுமைப்பெண் திட்டத்தில் சென்ற ஆண்டு 2 லட்சத்து 71 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் பயனடைந்தாக குறிப்பிட்டார்.

□□□□□□□□□

விமான விபத்து

நேபாள தலைநகர் காட்மண்டுவின் திரிபுவன் சர்வதேச விமான நிலையத்திலிருந்து இன்றுகாலை புறப்பட்ட தனியார் விமானம் விபத்துக்குள்ளானதில் 18 பேர் உயிரிழந்தனர்.

காட்மண்டுவிலிருந்து பொக்காராவிற்கு சீரமைப்பு பணிகளுக்காக ஊழியர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களுடன் சவுரியா ஏர் லைன்ஸ் விமானம் புறப்பட்ட சில நிமிடங்களிலேயே இந்த விபத்து நேரிட்டது.

18 பேரின் உடல்கள் மீட்கப்பட்ட நிலையில் விமானஓட்டி படுகாயங்களுடன் காப்பாற்றப்பட்டதாக அந்நாட்டின் காவல்துறை தெரிவித்துள்ளது.

□□□□□□□□□

கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன் மலைப் பகுதியை, தமிழக முதலமைச்சர் அல்லது விளையாட்டுத் துறை அமைச்சர், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சருடன் நேரில் சென்று ஆய்வு செய்ய வேண்டுமென்று சென்னை உயர்நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

கள்ளக்குறிச்சி விஷச்சாராய சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணையின் போது அப்பகுதியில் மக்களுக்கு செய்யப்பட்டுள்ள வசதிகள் குறித்து 2 நாட்களில் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்று அரசு வழக்கறிஞர் குறிப்பிட்டார்.

இதனை ஏற்று வழக்கு விசாரணையை வரும் 26-ம் தேதிக்கு ஒத்திவைத்த நீதிமன்றம், கள்ளச்சாராயம் மட்டுமே அப்பகுதி மக்களின் வாழ்வாதாரமாக உள்ள நிலையில், அதனை ஒழிக்க அம்மக்களின் வாழ்வாதாரத்திற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தியது.

□□□□□□□□□

நி.ஃ.பா வைரஸ்

கேரள மாநிலத்தில் நி.ஃ.பா வைரஸ் அச்சுறுத்தலால் கன்னியாகுமரி மாவட்டம் களியக்காவிளையில் சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு கண்காணிப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

24 மணிநேரமும் சுகாதாரத்துறையினர் சுழற்சி முறையில் கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டுள்ளனர்

இதனிடையே கோவை மண்டலத்திற்கு உட்பட்ட கல்வி நிறுவனங்கள் கேரளாவிற்கு சுற்றுலா செல்வதை தவிர்க்குமாறும் மாநில உயர்கல்வித்துறை அறிவுறுத்தி உள்ளது.

□□□□□□□□□

கன்னியாகுமரி வாய்ஸ்

கன்னியாகுமரி கடல் உள்வாங்கி காணப்படுவதால் கடலில் அமைந்துள்ள விவேகானந்தர் பாறைக்கு செல்லும் பூம்புகார் கப்பல் போக்குவரத்து படகு சவாரி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

□□□□□□□□□

மேட்டூர்

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு 60 ஆயிரத்து 771 கனஅடியாக உள்ளது.

